Department of Wildlife Conservation | No. 811-A, Jayanthipura Road, Battaramulla | Email - dg@dwc.gov.lk | www.dwc.gov.lk

UK International Development
Partnership | Progress | Prosperity

கல்பிட்டிய பார் ரீஃப் கடல் சரணாலயத்தின்

முகாமைத்துவ மதிப்பாய்வு

கல்பிட்டிய தீபகற்பம், மேற்கு கடற்கரையோரம்

இது எதைப் பாதுகாக்கிறது?

இலங்கையின் வடமேற்கு கடற்கரையில் அமைந்துள்ள கல்பிட்டியா பார் ரீ/ப் கடல் சரணாலயம், ஆழமான மணற்கல் பாறைகள் மற்றும் ஆழமற்ற பவளப் பாறைகள் உள்ளிட்ட பல்வேறு கடல் சுற்றுசூழல் அமைப்புகளைப் பாதுகாக்கிறது. இது பலவகை பவளப்பாறை இனங்கள், டால்பின்கள் போன்ற கடல் பாலூட்டிகள் மற்றும் உள்ளூர் பல்லுயிர் பெருக்கத்தை ஆதரிக்கக்கூடிய கடல் புல் படுக்கைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான கடல்வாழ் உயிரினங்களுக்கு தாயகமாகும்..
இந்த கடல் சரணாலயம் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு பிரபலமான இடமாகும், இது கடல்சார் பாலூட்டிகள் சுற்றுலா, கடற் பட்டச் சறுக்கல் மற்றும் ஸ்நோர்கெல்லிங் போன்ற செயல்பாடுகளை வழங்குகிறது, இது உள்ளூர் சமூகங்களுக்கு மதிப்புமிக்க வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குகிறது. வளமான பல்லுயிர் மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகள் என்பன, கல்பிட்டி பார் ரீ/ப்பை இலங்கையின் இயற்கை பாரம்பரியம் மற்றும் கடலோர பொருளாதாரத்தின் முக்கிய பகுதியாக ஆக்குகின்றன.



ஏப்ரல் 1992ல் விலங்கு மற்றும் தாவர பாதுகாப்பு சட்டத்தின் (அத்தியாயம் 469) கீழ் கடல் சரணாலயமாக.

அளவு : 306.7 சதுர கிமீ

பாதுகாக்கப்பட்ட பகுதியின் முகாமைத்துவ செயல்திறன் பற்றிய மதிப்பாய்வு

ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதி நியமிக்கப்பட்டவுடன், அது எவ்வளவு சிறப்பாக நிர்வகிக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம். முகாமைத்துவ செயல்திறனை மதிப்பிடுவதற்கு பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படலாம். பயன்படுத்தப்படும் மிகவும் பொதுவான முறைகளில் ஒன்று முகாமைத்துவ செயல்திறன் கண்காணிப்பு கருவி (METT-4). இது ஐந்து முகாமைத்துவ கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட 38 கேள்விகளுக்கு பதிலளிப்பதை உள்ளடக்கியது:



நாங்கள் செய்தவை

கடல் நாட்டு கூட்டுறவு திட்டம் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புத் துறை (DWC), கல்பிட்டியா பார் ரீ/ப் கடல் சரணாலயத்தின் முகாமைத்துவ ஆதாரங்களை ஆய்வு செய்தும், ப்ளூ ரிசோர்ஸஸ் டிரஸ்ட் 2024 ஜனவரி 26ல் நடாத்திய கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் மூலமும் 33 உள்ளூர் தரப்பினருடன் கலந்துரையாடியும், மதிப்பிட்டது. இதன் மூலம், நன்றாக செயல்படும் அம்சங்களையும், முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் முக்கிய நடவடிக்கைகளையும் நாம் கண்டறிந்துள்ளோம்.

தொடர்புடைய தரப்புகள்

மதிப்பாய்வில் ஈடுபட்ட துறைகள்:

அரசாங்கம் | அரசாங்கம் சாரா நிறுவனங்கள் | சுற்றுலா நிறுவனங்கள் | மீனவர்கள் | உள்ளூர் சமூகம்

அடையாளம் காணப்பட்ட அச்சுறுத்தல்கள்

- கழிமுகங்களில் இருந்து வரும் கலங்கல் மற்றும் வண்டல் படிவு
- காலநிலை மாற்றம்
- சுற்றுலாத்துறை
- மாசுபாடு
- தெளிவான ஆட்சிப் பங்களிப்புகள் இன்மை
- சட்டவிரோத மீன்பிடி

முக்கிய வெற்றிகள்

1. பார் ரீஃப் கடல் சரணாலய முகாமைத்துவத் திட்டம் (2019-2023) கடல் சரணாலயத்தின் முகாமைத்துவ, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு இலக்குகளை அடைய முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளைப் பட்டியலிடுகிறது.
2. 1980 களின் பிற்பகுதி முதல் இன்றுவரை, சரணாலயத்தின் வாழிடங்கள், உயிரினங்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் ஆட்சிமுறை குறித்து கணிசமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
3. பவளப் பாறை மீட்பு, சுற்றுலாவுக்கான சிறந்த நடைமுறை வழிகாட்டுதல்கள், மற்றும் உணர்திறன் மிக்க வாழிடங்களைப் பாதுகாக்க கட்டுப்பட்ட பகுதிகள் போன்ற செயல்முறை முகாமைத்துவ நடவடிக்கைகள் அமுலில் உள்ளன.
4. உள்ளூர் மீன்வள மற்றும் சுற்றுலா சங்கங்கள், பவளப் பாறையை சுத்தம் செய்தல், அழிவு செயல்பாடுகளை DWC-க்கு புகாரளித்தல் போன்ற அடிப்படை நிலையிலான முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.
5. சரணாலயத்தின் அளவு மற்றும் வடிவம் என்பன, அச்சுறுத்தலுக்கு உட்படக்கூடிய சுற்றுசூழல் அமைப்புகளை பாதுகாப்பதற்கு போதுமானது என, பங்குதாரர் தரப்பினர் நம்புகின்றனர்.

வாழிடம்/உயிரினங்கள்	நிலை	போக்கு
பவளப் பாறை	மோசமான நிலை	மோசமடைந்து வருகிறது
பாறை மீனினங்கள்	மோசமான நிலை	மோசமடைந்து வருகிறது
கடல் பாலூட்டிகள்	நடுநிலை	மேம்பட்டு வருகிறது
கடற்பாசி	அறியப்படவில்லை	அறியப்படவில்லை

ஒரு முகாமைத்துவக் கூறுக்கான METT மதிப்பெண்



அடுத்த நடவடிக்கைகள்

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் இந்த மதிப்பீட்டின் முடிவுகளை, எதிர்காலத்திற்கான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தும்

முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் முக்கிய நடவடிக்கைகள்

- அடுத்த ஐந்தாண்டு காலத்திற்கான, சரணாலயத்தின் மீதான அச்சுறுத்தல் தொடர்பான முக்கிய நிர்வாக நோக்கங்கள் மற்றும் நடவடிக்கைகளை திட்டமிட, ஸ்மார்ட் (குறிப்பிட்ட, அளவிடக்கூடிய, அடையக்கூடிய, தொடர்புடைய, காலக்கெடு) எனப்படும் முறைமையை உள்ளடக்கிய முகாமைத்துவத் திட்டத்தை உருவாக்குதல்.
- சரணாலய முகாமைத்துவத்துக்கு ஆதரவாக நீண்டகால ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்புத் திட்டத்தை உருவாக்குதல்.
- நிதி தேவைகளை நிவர்த்தி செய்ய நிதித்திட்டத்தை வடிவமைத்து, நிலையான நிதி முகாமைத்துவத்தினை உறுதி செய்தல்.
- பார்வையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும், வாழிடங்கள் மற்றும் உயிரினங்களைப் பாதுகாக்கவும் தேவையான, சரணாலயத்தின் உள்கட்டமைப்பை அமைத்தல்.
- அரச முகவர்கள், அரசு சாரா நிறுவனங்கள் (NGOs), உள்ளூர் சமூகம் ஆகியவற்றுடன் வலுவான கூட்டு உறவுகளை வளர்த்து, சட்ட அமுலாக்கம், கண்காணிப்பு மற்றும் வளப் பகிர்மானத்தை மேம்படுத்துதல்.